*இப்பாடத்திட்டம் பற்றி....*

*கடந்த 30 ஆண்டுகளாக,கலைப்பணி ஆற்றிவரும்,தமிழ்தூது தனிநாயகம் அடிகளார் நூண்கலைக்கல்லூரி,பலசிரமங்களுக்கு மத்தியிலும் பல மாணவர்களை உருவாக்கி,தொடர்ந்தும் பணியாற்றிவருவது யாவரும் அறிந்ததே.*

*எமது பாடத்திட்டங்கள் மூலம்,யேர்மானிய அரசின் பாடசாலைகளின்,பாடவிதானங்களுக்கு,ஒத்திசைவாக, கலைத் தேர்வையும், குறுகிய காலத்துள்,மேலதிக வகுப்புகள்,பயிற்சிப்பட்டறைகள்,ஊடாக அதி கூடிய சிறந்த பெறு பேறுகளைப் பெற்று, மாணவர்களை, அவர்களின் உயர் கல்விக்கு முன்னதாக,எல்லைதொடும் முயற்சியாக,மாணவர்களுக்கு, ஊக்கமளிக்க பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.*

*யாழ் பல்கலை,நுண்கலைப்பட்டதாரிகள்,லண்டன், ஆரோகணா,தமிழ்நாடு எம்.எஸ்.கலைக்கல்லூரி போன்ற நிறுவனக்களின் ஆலோசனைகளைப் பெற்று இப் பாடத்திட்டம் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.*
*யேர்மனி அரசால் அங்கீகரிக்கப்பட்ட,சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும்.*

*மாணவர்களின் பயிற்சிப்பட்டறை வரவு,அவர்கள் கற்குங்காலங்களில் அவர்களின் அரங்க வெளிப்பாடுகளின் எண்ணிக்கை,ஒப்படை போன்றவை அவர்களின் தரத்தை உயர்த்த வழிவகுக்கப்படும். அத்துடன்,*

*துணைப்பாடமொன்றில் தரம்3ல் சித்தியடையவேண்டும்*

*8வது ஆண்டின் நிறைவின்பின்,முழு அரங்கவெளிப்பாடொன்றை நிகழ்த்தி,இசை கலைமணி,நாட்டியக்கலைமணி,மிருதங்கக் கலைமணி, விருதை பெற்ற பின்னர் ஆசிரியர்தரத்தில் ,கலைப்பணியாற்ற வழிவகுக்கப்படும்.*

**Tamilischer Kultur- und Wohlfahrtsverein Essen e.V.**



# TCFA - Deutschland

*Akademie für Tamilische Künste und Kultur Deutschland*

[www.tcfa.de](www.tcfa.de)

# பாடத்திட்டம் - *Lehrplan*

**வாய்ப்பாட்டு (Gesang, Carnatic)**

**வீணை (Veena)**

**வயலின் (Violine)**

**கீபோர்ட் (KeyBoard)**

# தரம் 1

## செய்முறை

1. சரளி வரிசை (1ம் காலம்) 12
2. ஜண்டை வரிசை (1ம் காலம்) 04
3. மேல்ஸ்தாயி வரிசை (1ம் காலம்) 04
4. கீதம் 02
5. தேவாரம் அல்லது கிறிஸ்தவ கீதம் 02
6. நாட்டார் பாடல் 01

## அறிமுறை (வாய்மொழி மூலம் பரீட்சிக்கப்படுவர்)

1. சப்தசஸ்வரங்களின் பெயர்கள்
2. சப்ததாளங்களின் பெயர்கள்.
3. தேவாரம் பாடியோர்.
4. பரீட்சாத்திகள்கற்ற உருப்படிகளின்,

ராகம், தாளம், இயற்றியவர், ஆரோகணம்

அவரோகணம் தெரிந்திருத்தல்!

# <u>தரம் 2</u> (தரம் 1 உடன்)

## <u>செய்முறை</u>

| | |
|---|---|
| 1. சரளி வரிசை (2+3ம் காலம்) | 12 |
| 2. ஜண்டை வரிசை (2+3ம் காலம்) | 09 |
| 3. மேல்ஸ்தாயி வரிசை (2+3ம் காலம்) | 04 |
| 4. தாட்டு வரிசை | 02 |
| 5. அலங்காரம் (ஏகம், ரூபகம், திரிபுடை) | |
| 6. கீதம் | 03 |
| 7. திவ்யநாம கீர்த்தனை | 01 |
| 8. ஜதிஸ்வரம் | 01 |
| 9. தேவாரம் | 02 |
| 10. திருப்புகழ் | 01 |
| 11. நாட்டார் பாடல் | 01 |

## <u>அறிமுறை</u> (வாய்மொழி மூலம் பரீட்சிக்கப்படுவர்)

1. தாளத்தின் பிரிவுகள், லகு, த்துருதம், அனுத்ருதம்

2. ஜாதியுடன் சப்ததாளங்கள், அங்க அடையாளம், எண்ணிக்கை.

3. உருப்படிகளின் ராகம் தாளம், இயற்றியவர், ஆரோகணம், அவரோகணம் தெரிந்திருத்தல்!

## <u>தரம் 3</u> (தரம் 1-2 உடன்)

## <u>செய்முறை</u>

| | |
|---|---|
| 1. அலங்காரம் | 07 |
| 2. லட்சணகீதம் | 01 |
| 3. ஸ்வரஜதி | 01 |
| 4. ஆதிதாளவர்ணம் | 01 |
| 5. இலகு கீர்த்தனை (ஆதி, ரூபகம்) | 04 |
| 6. வெண்பா | 01 |
| 7. தேவாரம் அல்லது கிறிஸ்தவ கீதம் | 02 |
| 8. திருப்புகழ் | 01 |

9. <u>அகாரமாக</u> மூன்று காலங்களிலும் பாடுதல்:

சரளி, ஜண்டை, மேல்ஸ்தாயி!

## <u>அறிமுறை</u> (எழுத்துப்பரீட்சை)

1. சங்கீத முறையில் எழுதப்படும் குறியீடுகள்.

2. அலங்காரம் ஒன்றை ஸ்வரக்குறியீடுகளுடன் எழுதுதல்.

3. ஏழு சுரங்கள், 12 சுரஸ்தானங்கள் ஆகும் முறை.

4. <u>சிறுகுறிப்பு எழுதுதல்</u>: **சங்கீதம், நாதம், சுருதி, லயம் சுரம், ஸ்தாயி, ஆரோகணம், அவரோகணம், பூர்வாங்கம், உத்தராங்கம்.**

5. 7 தாளங்கள் 35 தாளங்கள் ஆகும் முறை

6. பின்வரும் ராகங்களின் ஆரோகணம் அவரோகணங்களும் சுரஸ்தானங்களும்: **சங்கராபரணம், மாயாமாளவகௌளை, பந்துவராளி, தோடி, மலகரி, ஹிந்தோளம், சுத்தசாவேரி, ஹம்ஸ்த்வனி, பிலகரி.**

7. திருஞானசம்பந்தர், வரலாறு (சுருக்கம்)

## ***தரம் 4*** *(தரம் 1-3 உடன்)*

### ***செய்முறை***

*1. நவராகமாலிகா வர்ணம் 01*

*2. ஆதிதாள்வர்ணம் 02*

*3. கீர்த்தனை 04*

*4. தேவாரம் 02*

*5. திருப்புகழ் 01*

*6. புராணம் 01*

*7. மெல்லிசைப்பாடல் 01*

*(பாரதியார், பாரதிதாசன் பாடல்)*

*8. ஜனக ராகமொன்றிற்கு ஆதி, ரூபக தாளத்தில் கற்பனாசுரம் பாடுதல்.*

*9. பார்த்துப்பாடல்*

*மாயமாளவகௌளை, ஹம்ஸ்த்வனி, சங்கராபரணம், கல்யாணி, மோகனம்.*

### ***அறிமுறை***

*1. 12 ஸ்வரஸ்தானமும், 16 ஸ்வரப்பெயர்களும், ஜனக, ஜன்னிய ராகங்கல் பற்றிய அறிவு.*

*2. 72 மேளகர்த்தா ராகங்கள் பற்றிய அடிப்படை அறிவு.*

*3. தாளஎடுப்பு, கிரகம் (சமம், அதீதம், அநாகதம்)*

*4. கீதம், கீர்த்தனை இவற்றின் லட்சணம்.*

*5. ராகலட்சணம்:* ***காம்போதி, ஆனந்தபைரவி, ஆரபி, மத்யமாவதி, கீரவாணி, கரகரப்பிரியா, கரிகாம்போதி, பந்துவராளி, கல்யாணி மோகனம்.***

*6. வாக்கேயக்காரர்களின் வாழ்க்கை வரலாறும் இசைப்பணியும்:*

***தியாகராஜர், கோபாலகிருஷ்ணபாரதியார்.***

## தரம் 5 *(தரம் 1-4 உடன்)*

## செய்முறை

*1. அடதாளவர்ணம் 01*

*2. ஜம்பைதாள வர்ணம் 01*

*3. ஆதிதாள்வர்ணம் 02*

*4. கீர்த்தனை 05*

*5. சௌக்ககால கீர்த்தனை 01*

*6. பஞ்சபுராணம்*

*7. மெல்லிசைப் பாடல் 01*

*(பாரதியார், பாரதிதாசன், செல்வச் சீராளன். கலாநாயகி சூரியகுமார், இதர தமிழ்ப் பாடலாசிரியர்கள்)*

*8. ஜன்னிய ராகத்தில் ராகம் பாடி கற்பனாசுரம் பாடல்.*

*9. பார்த்துப்பாடல், மோகனம், கல்யாணி, சங்கராபரணம், ஹம்சத்வனி, சுத்தசாவேரி, காமாஸ்.*

## அறிமுறை

*1. ஜனக, ஜன்னிய ராகங்களும், ஜன்னிய ராகத்தின் பிரிவும் உதாரணங்களுடன்.*

*2. வர்ணம், ஸ்வரஜதி, ஜதீஸ்வரம் ஆகியவற்றின் லட்ஷணமும், ஒப்பீடும்.*

*3. 35 தாளங்கள், 175 தாளங்கள் பற்றிய அறிவு.*

*4. இசைக்கருவிகள்: தம்புரா, வயலின், பக்கவாத்தியங்களின் அமைப்பு முறையும், பயன்பாடும்.*

*5. பண்ணிசை மரபு வரலாறு.*

*6. ராக லட்ஷணம்: ஆபோகி, கானடா, பைரவி, சாவேரி, கம்பீரநாட்டை, சிம்மேந்திர மத்திமம், ஷண்முகப்பிரியா, லதாங்கி, காமாஸ், கிந்தோளம்.*

*7. வாக்கேயக்காரர் வரலாறும், இசைப்பணியும்: பாபனாசம் சிவன், முத்துசாமி தீட்சிதர்.*

## ***தரம் 6*** *(தரம் 1-5 உடன்)*

## ***செய்முறை***

| | |
|---|---|
| *1. பஞ்சரத்தின கிருதி* | *01* |
| *2. அடதாளவர்ணம்* | *01* |
| *3. கீர்த்தனை* | *08* |
| *4. சௌக்ககால கீர்த்தனை* | *02* |
| *5. தில்லானா* | *01* |
| *6. பதம்* | *01* |
| *7. விருத்தம்* | |
| *(அபிராமி அந்தாதி, திருவெம்பாவை தாயுமானவர் பாடல்)* | |
| *8. திருவாசகம் மோகனராகத்தில் பாடுதல்* | *01* |

*9. விரும்பிய ஒரு ஆதிதாளக் கீர்த்தனைக்கு, ராகம், நிரவல், கற்பனாசுரம் - 2காலம் பாடுதல்.*

## ***அறிமுறை***

*1. தசவிதக் கமகங்கள், தாளதசப்பிரமாணங்கள். பற்றிய ஆய்வு.*

*2. பதம், தில்லானா - லட்ஷணங்கள்.*

*3. வாத்தியங்கள் பற்றிய அறிவு:*

*வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், படமும், விளக்கமும்.*

*4. வாக்கேயக்காரர்களின் வாழ்க்கை வரலாறும், இசைப் பணியும்: **சியாமாசாஸ்த்திரி, அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாபிள்ளை.***

*5. ராக லட்ஷணங்கள்: **சகானா, ஸ்ரீ ராகம் அடானா, நாட்டைக் குறிஞ்சி, மலையமாருதம்.***

## **ஒப்படை**

**மாணவர் தமது கற்கை நெறி குறித்ததான தேடலின் தொகுப்பை ஒப்படை செய்தல் வேண்டும்!**

## *தரம் 7* *(தரம் 1-6 உடன்)*

## செய்முறை

| | |
|---|---|
| *1. பஞ்சரத்தினக் கிருதி* | *01* |
| *2. பத வர்ணம்* | *01* |
| *3. அடதாளவர்ணம்* | *01* |
| *4. கீர்த்தனை* | *10* |
| *5. அஸ்டபதி அல்லது ஜாவளி* | *01* |
| *6. தில்லானா* | *01* |

*7. ஒரு ஜனக ராகத்திலுகம் ஒரு ஜன்னியராகத்திலும், ராக ஆலாபனை, நிரவல் கற்பனாசுரம் - 2 காலத்தில், பாடும் ஆற்றல்.*

## அறிமுறை

*1. மனோதர்ம சங்கீதம், அதன் பிரிவுகள், விளக்கம்.*

*2. ராகம், தானம், பல்லவி, நிரவல், கற்பனாசுரம் பற்றிய குறிப்பு.*

*3. நீர் கற்ற பல்லவியொன்றை, ஸ்வர சாகித்தியமாக திரி காலப்படுத்தி குறியிட்டுடன் எழுதுதல்.*

*4. பண்ணிசை பற்றிய அடிப்படை அறிவு.*

*5. 22 சுருதிகளின் முழுவிபரம்.*

*6. இசைக்கச்சேரிக்கான ஒழுங்குமுறைகள்.*

*7. ஈழத்தின் இசை வரலாறும் வளர்ச்சியும்.*

*8. வாக்கேயக்காரர் வரலாறும் இசைப் பணியும்:* **சுவாதித் திருநாள், முத்துத்தாண்டவர், ஈழத்து இசைப் புலவர் சண்முகரட்ணம், தட்ஷணாமூர்த்தி, திலகநாயகம் போல், பஞ்சாபிகேசன், கலாசூரி பத்மநாதன்.**

## **தரம் 8** *(தரம் 1-7 உடன்)*

### <u>செய்முறை</u>

*1. பஞ்சரத்ன கிருதி 01*
*2. ராகம், தானம், பல்லவி 01*
*விரும்பிய ராகத்தில், சம்பிரதாய முறைப்படி அமையவேண்டும். (திரிகாலம், திஸ்ரம், நிரவல் கற்பனாசுரம்).*

*3. ஸ்வரஜதி சியாமா சாஸ்த்திரி 03*

*4. ராகமாலிகை கீர்த்தனை*
*விருத்தத்தை ராகமாலிகையாகப் பாடுதல்,*

*5. சௌக்ககாலக் க்ருதிக்கு ராக நிரவல் கற்பனாசுரம் 01*

*6. மாணவர் ஒருவருக்கு, நீர் விரும்பிய ஓர் உருப்படியை, நேர அட்டவணைப்படுத்தி, கற்பித்துக் காட்டல்.*

### <u>அறிமுறை</u>

*1. கர்நாடக இசை, மேலைத்தேச இசை, ஹிந்துஸ்தானி இசை பற்றிய அறிவு.*

*2. பண்டைய பண்ணிசைகளும் இன்றைய ராகங்களும்.*

*3. கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை ஒப்பீடு.*

*4. கர்நாடக இசை, மேலைத்தேச இசை ஒப்பீடு.*

*5. நுண்கலைகளின் வள்ர்ச்சிக்கு, நவீன தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு. (வானொலி, தொலைக்காட்சி, ஒலிப்பதிவுகருவி, கணனி, கைபேசி)*

*6. இசை மண்டபங்களின் இலக்கணம்.*

*7. பாடகருக்கு இருக்கவேண்டிய குணங்களும், தோசங்களும்,*

8. ஒரு இசை ஆசிரியருக்கு இருக்கவேண்டிய பண்புகள்.

9. கோவில்களும், இசை வளர்ச்சியும்.

10. பின்வருவனவற்றின் சுருக்க வரலாறு:

அ) விபுலாநந்தரின் யாழ் நூல்
ஆ) சங்ககாலம் தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரை உள்ள தமிழிசை மரபு.

# "இசைக்கலைமணி"

பட்டயத்துக்கான

**அரங்க வெளிப்பாடு - அவைக்காற்றுக்கலை**

இசை அரங்கு ஒழுங்கு முறைப்படி
அரங்கிசை நிகழ்ச்சியொன்றினை அளித்தல்.
1.30-2.00 மணித்தியாலங்கள்.